4. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்த) சட்ட முன் வடிவு. 1981.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) முதல் துணை நிதி நிலை அறிக்கை—1980—81 (ஆ. இ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

1980–81ஆம் ஆண்டில் கூடுதல் மானியங்களுக்கான கோரிக்கைகளை பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது.

In pursuance of Article 203, Clause (3) of the Constitution of India, I Sadiq Ali, Governor of Tamil Nadu hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for further Grants for the year 1980-81.